# தமிழ் நாடு தகவல் ஆணையம்

காமதேனு கூட்டுறவு சிறப்பங்காடி முதல் தளம், புது எண் 378, அண்ணா சாலை,
தேனாம்பேட்டை, சென்னை-600018. (துபால் பெட்டி எண் 6405 தேனாம்பேட்டை)
தொலைபேசி எண் 24312841.

**வழக்கு எண். 10651/விசாரணை/2009**

**<u>விசாரணை நடைபெற்ற நாள். 25.9. 2009</u> (திருவண்ணாமலை)**

**முன்னிலை** **திரு தி சீனிவாசன், எம்.எஸ்சி.**
**மாநில தகவல் ஆணையர்.**

**மனுதாரர்:** திரு வி நாராயணன்,
1, 3வது தெரு, டீச்சர் நகர்
திருக்கழுக்குன்றம்,
காஞ்சிபுரம் மாவட்டம் 603 109

**பொது அதிகார அமைப்பு:** பொதுத் தகவல் அலுவலர்
வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம்
திருவண்ணாமலை

......

மனுதாரர் திரு வி நாராயணனும், பொது அதிகார அமைப்பின் சார்பாக திருவண்ணாமலை வருவாய் கோட்டாட்சியர் அலுவலக பொதுத் தகவல் அலுவலரும் இன்று (25.9.09) இவ்வாணையத்தால் திருவண்ணாமலையில் நடத்தப்பட்ட விசாரணைக்கு வந்திருந்தார்.

மனுதாரர் 11.3.09 அன்று 27 இனங்களில் ஒரு குறிப்பிட்ட மடம் தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்து 26.3.09 அன்று பொதுத் தகவல் அலுவலரால் தகவல்கள் தரப்பட்டுள்ளன. மனுதாரர் ஒரு சில இனங்களில் முழுத் தகவல்கள் தரப்படவில்லை என்று 27.4.09 அன்று இவ்வாணையத்திற்கு மேல் முறையீடு செய்த மனுவின் அடிப்படையில் வழக்கு இன்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

விசாரணையில் மனுதாரர் ஒரு சில தகவல்கள் விடுபட்டுள்ளதாகத் தெரிவித்தார். இது குறித்து பொதுத் தகவல் அலுவலரிடம் விசாரித்த போது,

மனுதாரருக்கு 19.9.09 அன்று நேரிடையாக கடிதம் மூலம் முழுத் தகவல்கள் தரப்பட்டதாகவும் தெரிவித்தார். மனுதாரர் அத்தகவல்களை பார்வையிட்டு பொதுத் தகவல் அலுவலர் மனுதாராரின் மனுவிற்கு முழுத் தகவல்களும் தரப்பட்டதாக கூறினார். மனுதாரருக்கு உரிய தகவல்கள் வழங்கப்பட்டதாக மனுதாரர் தெரிவித்ததால் வழக்கு முற்றாக்கப்படுகிறது.

**மாநில தகவல் ஆணையம்**
**ஒப்புதல் அளிக்கப்பட்ட நாள் 15.9.09**
**ஆணையத்தின் ஆணைப்படி**

உதவிப் பதிவாளர்

பொதுத் தகவல் அலுவர்
வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம்
திருவண்ணாமலை

திரு வி நாராயணன்,
1, 3வது தெரு, டீச்சர் நகர்
திருக்கழுக்குன்றம்,
காஞ்சிபுரம் மாவட்டம் 603 109